2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

16. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம் இல்லாத ஒரு தீர்மானத்தை வருத்தத்துடன் படிக்கிறேன்.*

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 11

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

18. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

158. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித நோய் எதிர்ப்பாற்றல் குறைக்கும் கிருமி மற்றும் பெறப்பட்ட நோய் எதிர்ப்பாற்றல் குறைபாட்டு அறிகுறிகள் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளை இயற்றியது குறித்து மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறையின் 25-5-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 159-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [மனித நோய் எதிர்ப்பாற்றல் குறைக்கும் கிருமி மற்றும் பெறப்பட்ட நோய் எதிர்ப்பாற்றல் குறைபாட்டு அறிகுறிகள் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 2017 (மத்திய சட்டம் 16/2017) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

159. 1963 ஆம் ஆண்டு அறநிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் 24-7-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்